# மக்கள் நல்வாழ்வு

# மற்றும்

# குடும்ப நலத்துறை

# மானியக் கோரிக்கை எண். 19

## அறிவிப்புகள்
## 2014–15

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்**
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

தமிழ்நாடு அரசு
2014

## 1) நான்காம் நிலை யானைக்கால் நோயாளிகளுக்கு வழங்கப்படும் மாத உதவித் தொகையை உயர்த்தி வழங்குதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, 5,654** நான்காம் நிலை யானைக்கால் நோயாளிகளுக்கு தற்போது வழங்கப்படும் மாத உதவித் தொகை, ரூ.**400**—லிருந்து ரூ.**1000**—ஆக உயர்த்தி வழங்கப்படும்.

**2) பிரசவித்த தாய்மார்களுக்கு உயிர்காக்கும் உடை (Non-pneumatic anti-shock garment) வழங்குதல்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** பிரசவத்தின் போது இரத்தப் போக்கினால் ஏற்படும் பேறுகால இறப்பை தடுத்து, பேறுகால தாய்மார்களின் இறப்பு விகிதத்தை குறைக்கும் பொருட்டு, பிரசவித்த தாய்மார்களுக்கு உயிர்காக்கும் 2,000 உடைகள் (Non-pneumatic anti-shock garments) ரூபாய் 60 இலட்சம் செலவில் வழங்கப்படும். இந்த உடைகள் '108' ஆம்புலன்ஸ் மற்றும் பிரசவம் நடைபெறும் அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேவைக்கேற்ப வழங்கப்படும்.

## 3) அனைத்து மாவட்டங்களிலும் தொற்றா நோய் தடுப்பு மருத்துவ முகாம்கள் நடத்துதல்

‘மருத்துவச் சேவையை நாடி மக்கள்’ என்ற நிலையை மாற்றி ‘மக்களை நோக்கி மருத்துச் சேவை’ என்ற அடிப்படையில் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** தொற்றா நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்த அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தில் பங்கேற்கும் தனியார் மருத்துவமனைகள் வாயிலாக தொற்றா நோய்கள், குறிப்பாக புற்று நோய் போன்ற நோய்களுக்கு, ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து (Cancer Screening) சிகிச்சை அளிக்க, 2000 சிறப்பு மருத்துவ முகாம்கள், அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படும்.

**4) சென்னை எழும்பூர் குழந்தைகள் நல நிலையம் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையின் அறுவை சிகிச்சை அரங்கம் மற்றும் சிகிச்சை பிரிவுகளை சீரமைத்து உபகரணங்கள் வழங்குதல்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** சென்னை எழும்பூர் குழந்தைகள் நல நிலையம் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் உள்ள அறுவை சிகிச்சை அரங்கம் மற்றும் சிகிச்சை பிரிவுகள் ரூபாய் **3** கோடி செலவில் சீரமைக்கப்பட்டு, உபகரணங்கள் வழங்கப்படும்.

**5) சென்னை ஸ்டான்லி, மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் ஆகிய 5 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவு அமைத்தல்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை, திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருச்சிராப்பள்ளி கி.ஆ.பெ. விஸ்வநாதம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகிய **5** மருத்துவமனைகளில் ரூபாய் **2.70** கோடி செலவில், குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவு அமைக்கப்படும்.

**6) சென்னை அரசு பொது மருத்துவமனையின் தீவிர இருதய சிகிச்சைப் பிரிவுகளுக்கு 35 வெண்டிலேட்டர் கருவிகள் வழங்குதல்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** சென்னை அரசு பொது மருத்துவமனையில் தீவிர இருதய சிகிச்சைப் பிரிவுகளின் பயன்பாட்டிற்காக, **35** வெண்டிலேட்டர் கருவிகள் ரூபாய் **2.10** கோடி செலவில் வழங்கப்படும்.

**7) அரசு மருத்துவமனைகளுக்கு, மருத்துவமனை கட்டில்கள், மெத்தைகள், தலையணைகள், படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள் போன்றவை வழங்குதல்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளின் வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு கூடுதலாக **4,055** மருத்துவமனை கட்டில்கள், மெத்தைகள், தலையணைகள், படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள் போன்றன ரூபாய் **1.67** கோடி செலவில் வழங்கப்படும்.

## 8) அரசு மருத்துவமனைகளுக்கு, தீவிர சிகிச்சை பிரிவு கட்டில்கள் வழங்குதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** அரசு மருத்துவமனைகளின் தீவிர சிகிச்சை பிரிவுகளை மேம்படுத்தும் நோக்குடன் கூடுதலாக **125** தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டில்கள் ரூபாய் **63** இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**9) அமரர் ஊர்தி சேவை திட்டத்தின் பயன்பாட்டிற்கு குளிர் சாதனப் பெட்டிகள் வழங்குதல்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** 50 குளிர் சாதனப் பெட்டிகள், ரூபாய் 75 இலட்சம் செலவில், அமரர் ஊர்தி சேவை திட்டத்தின் பயன்பாட்டிற்கு வழங்கப்படும்.

**10) தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்து துறைக்கு 100 கைப்பேசிகள் வழங்கி குறுந்தகவல் சேவை திட்டம் வலுப்படுத்துதல்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** ஊர்திகளின் சாலை இடை நிற்றலை தவிர்க்கும் பொருட்டும், கால விரயத்தினை குறைக்கும் பொருட்டும் தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்து துறைக்கு ரூபாய் 7 இலட்சம் செலவில், 100 கைப்பேசிகள் வழங்கி குறுந்தகவல் சேவை திட்டம் வலுப்படுத்தப்படும்.

**11) சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் டிஜிடல் ஊடுகதிர் கருவி நிறுவுதல்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் ரூபாய் **1** கோடி செலவில் டிஜிடல் ஊடுகதிர் (Digital X-Ray) கருவி நிறுவப்படும்**.**

**12) 100 அரசு மருத்துவமனை அறுவை சிகிச்சை அரங்குகளில், Nano Surface Shield அமைத்தல்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** அறுவை சிகிச்சை அரங்குகளில், அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் நோயாளிகளுக்கு கிருமித்தொற்று ஏற்படாமல் இருக்க, 100 அரசு மருத்துவமனைகளில் உள்ள அறுவை அரங்குகளுக்கு ‘Nano Surface Shield’ ரூபாய் 5 கோடி செலவில் அமைக்கப்படும்.

**13) தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் இருதய இரத்த நாள அடைப்பை துல்லியமாக கண்டறியும் கருவி அமைத்தல்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் இருதய இரத்த நாள அடைப்பை துல்லியமாக கண்டறியும் (Intra Vascular Ultra Sound) கருவி ரூபாய் **82** இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

**14) தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் உள்ள பிணவறைக்கு குளிர் சாதனப் பெட்டிகள் வழங்குதல்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் உள்ள பிணவறைக்கு ரூபாய் 4 இலட்சம் செலவில் குளிர் சாதனப் பெட்டிகள் வழங்கப்படும்.

**15) தற்போது பிணவறை வசதி இல்லாத 10 அரசு வட்ட மருத்துவமனைகளில், பிணவறைப் பிரிவு ஏற்படுத்துதல்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** தற்போது பிணவறை வசதி இல்லாத 10 அரசு வட்ட மருத்துவமனைகளில், ரூபாய் **3.50** கோடி செலவில் கட்டடம் கட்டி பிணவறைப் பிரிவு ஏற்படுத்தப்படும்.

**16) இயற்கை மருத்துவம், யோகா மற்றும் அக்குபஞ்சர் ஆகிய மூன்று பிரிவுகளில், மூன்றாண்டு முதுகலை பட்டப்படிப்பு தொடங்குதல்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** இயற்கை மருத்துவம், யோகா மற்றும் அக்குபஞ்சர் ஆகிய மூன்று பிரிவுகளில், ஒவ்வொரு பிரிவிலும் **5** மாணவர்கள் சேர்க்கையுடன் மூன்றாண்டு முதுகலை பட்டப்படிப்பு தொடங்கப்படும்.

**17) பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் புறநோயாளிகள் பிரிவிற்கு, புதிய கட்டடம் கட்டுதல்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் புறநோயாளிகள் பிரிவிற்கு, இந்திய மருத்துவ குழுமத்தின் பரிந்துரைப்படி, புதிய கட்டடம் ரூபாய் 5 கோடி செலவில் கட்டப்படும்.

**18) பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு டிஜிடல் ஊடுகதிர் கருவி வழங்குதல்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ரூபாய் **15** இலட்சம் செலவில் டிஜிடல் ஊடுகதிர் கருவி வழங்கப்படும்.

**19) மூளைச்சாவு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைத் திட்டத்தை விரிவுபடுத்தி, இதற்காக ஒரு குழுமம் மற்றும் மண்டல உறுப்பு மாற்று சிகிச்சைக்கான மையம் அமைத்தல்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையின் கீழ்** மூளைச்சாவு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைத் திட்டத்தினை செயல்படுத்துவதில் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் பன்மடங்கு அதிக எண்ணிக்கையிலான செயலாக்கத்துடன், தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்மாதிரி மாநிலமாகத் திகழ்கிறது. மூளைச்சாவு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைத் திட்டத்தை வலுப்படுத்தி, விரிவுபடுத்தும் விதமாக "மூளைச்சாவு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை குழுமம்"(Cadaver Transplantation Authority) ஒன்று அமைத்து, இத்திட்டத்தினை ஒருங்கிணைக்க புதிதாக ஒரு "மண்டல உறுப்பு மாற்று சிகிச்சைக்கான

மையம்" (Regional Centre for Organ Transplantation) உருவாக்கப்படும்.

இந்நடவடிக்கைகள் உறுப்பு மாற்று சிகிச்சைக்காக நீண்ட காலமாக காத்திருப்போர்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும்.